இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 3

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II – 2022/2023

LLU3303– உரோமானியச் சட்டம்

காலம் : 1 மணித்தியாலம்

---

திகதி: 22.10.2023 நேரம்: மு.ப. 09.30 – மு.ப. 10.30

---

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு(02)

**ஒரு (01) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.**

**தெளிவற்ற கையெழுத்திற்கு மாணவர்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. 20 வயதினையுடைய உரோமானியப் பிரஜையான கிளெடஸ், செல்வந்த வர்த்தகர் ஒருவரின் ஒரே பெண்ணான எட்காவினை திருமணம் செய்ய எண்ணியிருந்தார். எனினும், கிளெடஸின் குடும்பமானது யூத இனத்தின் வழித்தோன்றல் எனக் கூறி எட்கா குடும்பத்தின் தாதையான புருனோ இத்திருமணத்தினை அனுமதிக்க மறுத்தார். இச்சூழ்நிலையில், கிளெடஸ் திருமண வைபகத்தினை கொண்டிருப்பதற்கு பதிலாக தன்னுடன் ஒரு வருடத்திற்கு கூடி வாழுவதற்கு அழைத்தான். எனினும், எட்கா புருனோவின் சம்மதத்திற்காக காத்திருக்க தீர்மானித்ததுடன், ஒரு வலிதான திருமணத்திற்கான *dos* இனை யார் கொடுக்க முடியும் என்பதை அறிவதற்கும் விரும்பினாள்.

   உரோமானியச் சட்டத்தின் கீழ் மேற்தரப்பட்ட செயல்களின் சட்டரீதியான விளைவுகளை விளக்கி, கிளெடஸ் மற்றும் எட்கா ஆகியோருக்கு ஆலோசனை வழங்குக.

   (20 புள்ளிகள்)

2.

   A. ரோமானியப் பிரஜையும் இரண்டு மகன்கள் மற்றும் மகளினுடைய தந்தையுமாகிய பீ(f)லிக்ஸ் விருப்பாவணம் ஒன்றினை தயாரிக்க கருதியதுடன், வலிதான ரோமானிய விருப்பாவணம் ஒன்றினை ஆக்குவதற்கு திருப்திப்படுத்தப்படக் கூடிய தேவைப்பாடுகள் பற்றி அறிந்து கொள்வதற்கும் எதிர்பார்க்கின்றான். அதேவேளையில், பீ(f)லிக்ஸின் மனைவியாகிய கமீலா அவர்களின் நான்காவது பிள்ளையினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றாள்.

பீ(f)ளிக்ஸிற்கு ஆலோசனை வழங்குக.

(10 புள்ளிகள்)

B. டைடஸ் தனது அடிமையான சுல்லாவை தனது சொத்தின் ஒரே வாரிசாக பரிந்துரைத்து விருப்பாவணமொன்றை எழுதுகின்றான். ஒரு வருடத்தின் பின்னர் டைடஸ் இறந்து விடுகின்றான். அவரது மூன்று பிள்ளைகளாகிய ஜூலியா, அல்பா மற்றும் மாவியஸ் ஆகியோர், பின்னர் அவர்கள் அனைவரும் விருப்பாவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொது விதியின் மூலம் வாரிசுரிமை நீக்கப்பட்டுள்ளமையினைக் கண்டுபிடித்தனர்.

ஜூலியா, அல்பா மற்றும் மாவியஸ் ஆகியோருக்கு டைடஸின் விருப்பாவணத்தினை வெற்றிகரமாக சவாலுக்குட்படுத்த முடியுமா என்பது தொடர்பாக ஆலோசணை வழங்குவதுடன் அத்தகைய வழக்கில் அவர்கள் வெற்றி பெற்றால் அதன் விளைவு எத்தகையது என்பதனையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது.